# அரியலூர் நகராட்சி

## 2019–20 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### 1) அமைப்பு

அரியலூர் நகராட்சி அரியலூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு நகராட்சிகளில் உள்ள ஒரு நகராட்சி ஆகும். இந்நகராட்சி அரசாணை எண் 372 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் .16.12.2014ன்படி அரியலூர் பேரூராட்சி நிலையிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதனை தொடர்ந்து அரசாணை எண் 154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் .09.08.2010ன்படி மூன்றாம் நிலை நகராட்சி நிலையிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அரியலூர் நகராட்சியின் மக்கள் தொகை . 28902 ஆகும். இதன் பரப்பளவு 6.72 ச.கி.மீ ஆகும்.

### 2) நகர் மன்றம்

அரியலூர் நகர் மன்றம் மொத்தம் 18 வார்டுகளாக பிரிக்கப்பட்டு மக்கள் தொகை அடிப்படையில் பட்டியல் இனத்தவர்கள் , பட்டியல் இனப்பெண்கள் மற்றும் பொதுப்பிரிவு பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் பொருட்டு கீழ்க்கண்டவாறு வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| வரிசை எண் | இட ஒதுக்கீடு விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகளின் எண்ணிக்கை | வார்டு எண்களின் விபரம் |
|---|---|---|---|
| 1) | பொது | 8 | 3,4,7,8,11,13,16,17 |
| 2) | பொது (பெண்கள்) | 8 | 1,2,5,6,9,12,14,15 |
| 3) | பட்டியல் இனத்தவர்கள்(பொது) | 1 | 18 |
| 4) | பட்டியல் இனத்தவர்கள் (பெண்கள் ) | 1 | 10 |
| 5) | பழங்குடியினர்(பொது) | - | - |
| 6) | பழங்குடியினர்(பெண்கள்) | - | - |
| மொத்தம் | | 18 | - |

**3) நிர்வாகம்**

அறிக்கை ஆண்டில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் கீழ்க்கண்டுள்ளபடி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிந்து வருகின்றனர்.

| Sl.No. | Name of the Posts | Sanctioned Strength | Filled | Vacant |
|---|---|---|---|---|
| | **General Service** | | | |
| | Manager | 1 | 0 | 0 |
| | Assistant | 2 | 1 | 1 |
| | Junior Assistant | 3 | 0 | 0 |
| | Record Clerk | 1 | 0 | 0 |
| | Night Watchman | 1 | 0 | 0 |
| | Revenue Assistant | 5 | 0 | 0 |
| | Driver | 1 | 0 | 0 |
| | Office Assistant | 1 | 0 | 0 |
| | Market Watch Man | 1 | 0 | 0 |
| | Date Entry Operator | 1 | 0 | 0 |
| | **Engineering Service** | | | |
| | Municipal Engineer -III | 1 | 0 | |
| | Over Sear | 1 | 0 | |
| | Work Inspector | 1 | 0 | |
| | Tape Inspector | 1 | 0 | |
| | Fitter | 2 | 0 | |
| | Electrician -II | 2 | 0 | |
| | Tank WatchMan | 3 | 2 | |
| | | | | |

| Sl.No. | Name of the Posts | Sanctioned Strength | Filled | Vacant |
|---|---|---|---|---|
| | **Health Service** | | | |
| | Sanitary Inspector | 1 | 1 | |
| | Sanitary Supervisor | 3 | 3 | |
| | Field Assistant | 1 | 0 | |
| | PH Dirver | 2 | 1 | |
| | Sanitary Worker | 48 | 5 | |
| | **Town Planning** | | | |
| | Town Planning Inspector | 1 | 0 | 0 |

பல்வேறு பிரிவுகளில் உள்ள காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் ,பொது நிர்வாகம் மற்றும் பொதுசுகாதார பிரிவு பணியிடங்களில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கருணை அடிப்படையில் நிரப்பப்பட்டு வருகிறது.

**3) வருவாய் இனங்கள்**

அரியலூார் நகராட்சியில் நடப்பு நிதியாண்டில் வருவாய் தரும் இனங்களில் கீழ் கண்ட விபரபடி கேட்பு எழுப்பப்பட்டு வருவாய் ஈட்டப்படுகிறது.

| வரிசை எண் | வரி/வரி யில்லா இனங்கள் விபரம் | வரி விதிப்புக்களின் எண்ணிக்கை | கேட்பு தொகை (ரூ.லட்சத்தில்) | வசூல் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1) | சொத்து வரி | 12686 | 207.76 | 114.56 |
| 2) | காலி மனை வரி | 447 | 2.69 | 1.15 |
| 2) | குடிநீர் கட்டணம் | 4404 | 34.43 | 24.53 |
| 3) | தொழில் வரி | 1050 | 19.68 | 42.32 |
| 4) | பாதாள சாக்கடை கட்டணம் | 718 | 8.14 | 0.74 |
| 5) | வரியில்லா இனங்கள் | 170 | 98.68 | 64.78 |

## 4) நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விபரம்

அரியலூர் நகராட்சியில் 2019–2020 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவிபரப்படி அரசு மான்ய தொகை உதவியுடன் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் பெயர் | திட்டத்தின் மதிப்பீடு | விடுவிக் கப்பட்ட தொகை | மொத்த பணிகளின் எண்ணிக் கை | முடிக்க ப்பட்ட பணிகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | இடைவெளி நிரப்பும் திட்டம் 2015–16 | வார்டு எண்.03 நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல் | 60.00 | 60.00 | 1 | 1 |
| 2 | | வார்டு எண்.11 சமுதாய அடுப்பு அமைத்தல் | 25.00 | 25.00 | 1 | 1 |
| 3 | இடைவெளி நிரப்பும் திட்டம் 2016–17 | வார்டு எண்.11 புதிய அலுவலகக்கட்டிடம் கட்டும் பணி | 150.00 | 133.41 | 1 | 1 |
| 4 | Kfw | நீர்நிலைகள் மேம்படுத்தும் பணிகள் | 156.00 | 68.55 | 3 | 3 |
| 5 | TANCEM Fund 2016–17 | நீர்நிலைகள் மேம்படுத்தும் பணிகள் | 38.87 | 29.87 | 3 | 2 |
| 6 | தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) | மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளர் உடன் வருவோர் தங்கும் விடுதி | 60.00 | 22.13 | 1 | 1 |
| 7 | மூலதன நிதி 2018–19 | திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பிரதான குழாய் மாற்றி அமைத்தல் | **1517.55** | **1216.48** | **1** | **0** |
| 8 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2018–19 | சிப்பம் 1 | **180.00** | **180** | **21** | **21** |
| 9 | | சிப்பம் 2 | **195.00** | **106.8** | **30** | **30** |

- மூலதன நிதி திட்டத்தின் கீழ் திருமானூர் நீரேற்றும் நிலையத்தில் இருந்து அரியலூர் நகராட்சிக்கு ரூ.1517.55 இலட்சம் மதிப்பீட்டில் பிராதான குடிநீர் குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- **NULM** திட்டத்தின் கீழ் நோயாளியுடன் வருபவர்களுக்கான ஓய்வு அறை கட்டிடம் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- இடை வெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் அரிலூர் ரயில்வே மேம்பாலத்தின் அருகில் அருகில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் நவீன தகன எரிவாயு மேடை (Gasifier Crematorium ) கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- **KFW** திட்டத்தின் கீழ் ரூ. 156 இலட்சம் மதிப்பீட்டில் ஐயப்பன் ஏரி, பள்ளி ஏரி மற்றும் வண்ணான் குட்டை ஆகிய மூன்று ஏரிகள் தூர் வாரப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது.

- இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நகராட்சி அலுவலகம் கட்டப்பட்டுள்ளது

- தமிழ் நாடு நகர்புர சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 375 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

- 14 வது நிதி குழு திட்டத்தின் கீழ் ரூ. 92.78 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

**5) குடிநீர் விநியோகம்**

அரியலூர் நகராட்சி அரசாணை எண். 372 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:16.12.2004ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக்கப்பட்டது. அதன்பின்னர் அரசாணை (நிலை) எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 09.08.2010க்கிணங்க, 09.08.2010 முதல் இரண்டாம்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட செயல்பட்டு வருகிறது இந்நகராட்சி 18 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 28902 மக்கள் தொகை உள்ளனர். இந்நகராட்சி மொத்த பரப்பளவு 7.62 சதுர கி.மீ ஆகும். இந்தாண்டு ஜனவரி மாதம் முதல் இந்நாள் வரை சுமார் 369.1மிமீ மழை நகர பகுதியில் பதிவாகியுள்ளது.அரியலூர் நகராட்சி பகுதி மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திட அரியலூர் நகரில் இருந்து சுமார் 28 கி.மீட்டர் தொலைவில் உள்ள திருமானூர் கொள்ளிடம் ஆற்றங்கரையிலிருந்து 1992ம் ஆண்டு

**கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின்** மூலம் 2 நீர் பெரும் ஆதார கிணறுகள், 2002ம் ஆண்டு **பொன்விழா குடிநீர் திட்டத்தின்** மூலம் 2 நீர் பெரும் ஆதார கிணறுகள் மூலம் மற்றும் வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் 4 ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இந்த தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீரானது சாத்தமங்கலம், கீழப்பழூவூர், வாரணவாசி, தவுத்தாய்குளம் மற்றும் அம்மாக்குளம் ஆகிய வழியோர கிராமங்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும், அரியலூர் நகராட்சிக்கு கொள்ளிடம் ஆற்றில் திருமானூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நாள் ஒன்றிற்கு 2.54 MLD அளவு பெறப்படும் குடிநீர் நகராட்சி அலுவலக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (3.50 இலட்சம் லிட்டர்), கால்நடை மருத்துவமனை வளாக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (6.00 இலட்சம் லிட்டர்) மற்றும் கல்லூரி சாலை மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி (5.00 இலட்சம் லிட்டர்) ஆகியவற்றின் மூலம் தினசரி 86LPCD என்ற வீதத்தில் தினசரி குடிநீர் 1.30 மணி நேரம் விநியோகம் செய்யப்படுகிறது.

அரசாணை (நிலை)எண்.125ன்படி வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் ரூ.142.00 இலட்சம் மதிப்பீட்டில் 66 குடிநீர் தொடர்பான பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 18.06.2019 அன்று பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோடைக்காலங்களில் குடிநீர் தட்டுபாடுன்றி குடிநீர் கிடைக்க வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

<u>குடிநீர் விநியோகம் பற்றிய குறிப்பு</u>

| | | | |
|---|---|---|---|
| 1) | குடிநீர் ஆதாரம் அமைந்துள்ள இடங்கள் | : | திருமானூர்– கொள்ளிடம் ஆறு |
| 2) | தேவைப்படும் மொத்த குடிநீர் கொள்ளளவு (135 LPCD வீதம்) | : | 3.90 MLD (UGSS Town) |
| 3) | தற்போது கிடைக்கப்பெறும் குடிநீர் கொள்ளளவு (86 LPCD வீதம்) | : | 2.50 MLD |
| 4) | தினமும் வழுங்கப்படும் குடிநீர் அளவு நாள் ஒன்றுக்கு | : | 86 லிட்டர் |
| 5) | குடிநீர் தன்மை : சுத்திகரிக்கப்படுத்துதல் / நீர் உறிஞ்சு கிணறு | : | நீர் உறிஞ்சு கிணறு |
| 6) | குடிநீர் விநியோகம் | : | தினமும் ஒரு முறை (1.30 மணி நேரம்) |

7) உள்ளூர் கூடுதல் நீர் ஆதாரங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஆழ்துளைக் கிணறுகள் (கைப்பம்பு) | : | 13 |
| 2. ஆழ்துளைக் கிணறுகளுடன் கூடிய மின் விசைப்பம்புகள் | : | 53 |
| 3. ஏரிகள் | : | 10 |

| | | |
|---|---|---|
| 8) மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் எண்ணிக்கை மற்றும் கொள்ளளவு | : | 1) நகராட்சி அலுவலகம் : 3.50 இலட்சம் லிட்டர்<br>2) கல்லூரிச் சாலை : 5.00 இலட்சம் லிட்டர்<br>3) கால்நடை மருத்துவமனை : 6.00இலட்சம் லிட்டர் |
| 9. குடிநீர் பிரதான குழாய்கள் நீளம் (பம்பிங் மற்றும் இயல்பு நீர்வரத்து) | : | 28 கி,மீ |
| 10. குடிநீர் பகிர்மான குழாய்கள் மொத்த நீளம் | : | 47 கி.மீ |
| 11 பொதுக்குழாய்கள் எண்ணிக்கை | : | 1 65 |
| 12 குடிநீர் குழாய் இணைப்புகள் எண்ணிக்கை | : | 4414 |

13 குடிநீர் கட்டணம் வைப்புத்தொகை

| | | |
|---|---|---|
| 1. குடியிருப்பு | : | ரூ.5,000/— |
| 2. வணிகம் | : | ரூ.10,000/— |
| 3. தொழிற்சாலை | : | ரூ.10,000/— |

14 குடிநீர் மாத வாடகை

| | | |
|---|---|---|
| 1. குடியிருப்பு | : | ரூ.60/— |
| 2. வணிகம் | : | ரூ.150/— |
| 3. தொழிற்சாலை | : | ரூ.150/— |

15 தலைமை நீரேற்று நிலைய மின் மோட்டார்கள்

| | | |
|---|---|---|
| 1. 50 H.Pமோட்டார் | : | 4 |
| 2. 7.5 H.P மோட்டார் | : | 12 |
| 3. 200 KVA டிரான்ஸ்பார்மர் | : | 2 |

16 குடிநீர் வழங்கப்படும் வழியோரக்கிராமங்கள் எண்ணிக்கை : 5 எண்ணிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| : | 1) சாத்தமங்கலம் | – | 60,000 லிட்டர் |
| : | 2) கீழப்பழூவூர் | – | 1,00,000 லிட்டர் |
| : | 3) வாரணவாசி | – | 60,000 லிட்டர் |
| : | 4) தவுத்தாய்குளம் | – | 60,000 லிட்டர் |
| : | 5) அம்மாகுளம் | – | 30,000 லிட்டர் |
| | கூடுதல் | – | 3,10,000 லிட்டர் |

<u>திடக்கழிவு மேலாண்மை</u>

❖ அரியலூர் நகராட்சிப் பகுதிகளில் தினசரி வீடு வீடாக குப்பைகள் மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வாங்கப்படுகிறது.

❖ சேகரிக்கப்படும் குப்பைகளில் மக்கும் கழிவுகள், நுண் உரமாக்குதல் மையங்களில் (MCC, OCC) உரமாக்கப்பட்டு விவசாயத்திற்கு வழங்கப்படுகிறது. மக்காத கழிவுகள், உலர் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதனால் குப்பைகள் திறந்தவெளியில் கொட்டப்படாமல் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே அழிக்கப்படுகிறது. (Zero waste concept)

**<u>தொழில் வரி விதிப்பு விபரங்கள்.</u>**

| வ.எண் | வருட வருமானம் (ரூபாயில்) | தற்போதைய அரையாண்டு தொழில் வரி (ரூபாயில்) | 25% உயர்த்தப்பட்ட தொழில் வரி (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | 21000வரை | இல்லை | இல்லை |
| 2 | 21000முதல் 30000 வரை | 120/– | 150/– |
| 3 | 30001 முதல் 45000 வரை | 375/– | 395/– |
| 4 | 45001 முதல் 60000 வரை | 590/– | 740/– |
| 5 | 60001 முதல் 75000 வரை | 900/– | 1130/– |
| 6 | 75001க்கு மேல் | 1175/– | 1250/– |

**<u>முடிவுரை:</u>**

இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, பொது சுகாதார வசதி, சாலை வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள் அனைத்தையும் தொய்வு இல்லாமல் வழங்க இந்நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியில் பெறப்படும் கருத்துக்களை ஏற்று அதற்கு பரிந்துரை செய்து திட்ட பணிகளை முழுமையாகவும் துரிதமாகவும் செயல்படுத்த ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,தஞ்சாவூர் மற்றும் அனைத்து உள் மற்றும் வெளி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி நன்றி கூறி இவ்வறிக்கையை முடிக்கிறேன்.

ஆணையர்,
அரியலூர் நகராட்சி.